**Deposition of Witness**

**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, THIRUMAYAM**

**O.S. No. 161 /2023**

Deposition of – PW1 / Plaintiff

| Name : | பாப்பாத்தி | Caste : | |
|---|---|---|---|
| Husband's Name : | ஆறுமுகம் | Calling : | |
| Village : | பூவாண்டிப்பட்டி | Religion: | |
| District : | சிவகங்கை | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 04.03.2024

**முதல் விசாரணை**

நான் பூவாண்டிப்பட்டி கிராமம், காரைக்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் நான் வாதி ஆவேன். இவ்வழக்கில் நான் எனது தரப்பிலிருந்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படும் பிரமாண வாக்குமூலம் என்னால் கொடுக்கப்பட்டுள்ளதுதான். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். பிரமாண வாக்குமூலத்தினை நான் படித்து பார்த்து அதில் கூறியுள்ள சங்கதிகள் சரியென ஒப்புக்கொண்டு தேவையான இடங்களில் என் கையொப்பம் போட்டுள்ளேன். எனது தரப்புக்கு ஆதரவாக ஆவணங்களை குறியீடு செய்ய பிரார்த்திக்கிறேன்.

| வ.எண் | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| வா.சா.ஆ. 1 | 22.08.2013 | தான செட்டில்மென்ட் ஆவணம் | கணினி பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ. 2 | 04.06.2017 | சாட்சியின் தந்தை கிருஷ்ணனின் இறப்புச்சான்றிதழ் | அசல் |
| வா.சா.ஆ. 3 | 10.02.2019 | சாட்சியின் மகன் சுரேஷின் திருமண அழைப்பிதழ் | அசல் |
| வா.சா.ஆ. 4 | – | சாட்சியின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) | ஒளிநகல் |
| வா.சா.ஆ. 5 | 02.11.2019 | புல எண்கள் 54/6, 60/5, 81/1–ற்கான வில்லங்கச் சான்று | கணினி பதிவிறக்க நகல் |

**ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**